தினமணி

## "நெல் சாகுபடி பரப்பு 22 லட்சம் ஏக்கர் குறைந்துள்ளது'

First Published : 19 Jul 2010 12:25:22 PM IST

திருச்சி, ஜூலை 18: நெல் சாகுபடி பரப்பளவில் ஏறத்தாழ 22 லட்சம் ஏக்கர் குறைந்துள்ளது என, திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கத்தில் தெரிவிக்கப்பட்டது

திருச்சியில் கிரியேட் அமைப்பு சார்பில் நடைபெற்ற உழவர்கள், நுகர்வோர் குழு பிரதிநிதிகளுக்கான இயற்கை விவசாய நெல் குறித்த கருத்தரங்கத்தில் ஃபெட்காட் அமைப்பின் தலைவர் இரா. கலாதரன் பேசியது:

"பசுமைப் புரட்சியின் வெற்றிக்கான காரணம் உயர் விளைச்சல் ரகங்களே. உயர் விளைச்சல் ரகங்களின் வெற்றிக்கு ரசாயன உரமும், பூச்சிக்கொல்லி மருந்துகளும்தான் காரணம்.

தொடர்ந்து ரசாயன உரங்களை உபயோகப்படுத்தியதால், நிலங்கள் அவற்றின் வளத்தை இழந்துவிட்டன. இதனால், சுற்றுச்சூழல் மாசுபட்டுக் கிடக்கிறது. ரசாயனத் தாக்கம் இல்லாத அரிசியோ, பருப்பு வகைகளோ, பழங்களோ, காய்கறிகளோ இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை மாற வேண்டும்' என்றார் கலாதரன்.

கிரியேட் அமைப்பின் நிர்வாக அறங்காவலர் இரா. பொன்னம்பலம் பேசியது:

"பிற விளைபொருள்களோடு ஒப்பிடுகையில் இன்றைய காலகட்டத்தில் நெல் ஒரு லாபகரமான பயிராக இல்லை. இடு பொருள்களின் விலை, கூலி உயர்வு, ஆள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உற்பத்திச் செலவு அதிகரித்து வருகிறது.

அதனால், மாற்றுப் பயிர்களுக்கு மாற வேண்டிய கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நன்செய் நிலங்கள் தொழில்சாலைகளுக்கும், வீட்டுமனைகளுக்கும் தொடர்ந்து பலியாகிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் 1950 ஆம் ஆண்டுகளில் நெல் பயிரிடப்பட்ட பரப்பு 76 லட்சம் ஏக்கர்களாக இருந்ததாகவும், அது தற்போது 54 லட்சம் ஏக்கர்களாகக் குறைந்துவிட்டதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன என்றார் பொன்னம்பலம்.

காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கப் பொதுச் செயலர் காவிரி தனபாலன் பேசியது:

"தமிழகத்தில் ஆயிரக்கணக்கான நெல் ரகங்கள் இருந்ததாகத் தெரிகிறது. இவை அனைத்தையும் பசுமைப் புரட்சிக்கு பலி கொடுத்துவிட்டோம். ஆங்காங்கே ஒரு சில ரகங்கள் மட்டுமே தற்போது எஞ்சியுள்ளன' என்றார் தனபாலன்.

கிரியேட் அமைப்பின் பயிற்சி இயக்குநர் இரா. ஜயராமன், விவசாய சங்கக் கூட்டமைப்பின் தஞ்சை மாவட்ட இணைச் செயலர் ப. ஜகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருத்தணியில் 41 மி.மீ. மழை**

First Published : 20 Jul 2010 04:23:56 AM IST

திருவள்ளூர், ஜூலை 19: சனிக்கிழமை இரவு முதல் பெய்த மழையில் மாவட்டத்திலேயே திருத்தணியில் அதிகபட்சமாக 41 மில்லி மீட்டர் பதிவாகியுள்ளது.
÷கடந்த சில தினங்களாக திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்து வரும் மழையின் அளவு ( மில்லி மீட்டரில்) அம்பத்தூர் 12, செம்பரம்பாக்கம் 7, சோழவரம் 9, பூண்டி 18, ஊத்துக்கோட்டை 30, திருவள்ளூர் 9, பொன்னேரி 20, கும்மிடிப்பூண்டி 12, திருத்தணி 41, பள்ளிப்பட்டு 26, தாமரைப்பாக்கம் 10, பூந்தமல்லி 10 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**உழவர்களுக்கான மண்புழு உரம் தயாரிப்புப் பயிற்சி**

First Published : 19 Jul 2010 11:21:52 AM IST

மதுரை,. ஜூலை 18: உழவர்களுக்கான மண்புழு உரம் தயாரிப்பு குறித்த ஒருநாள் பயிற்சி ஜூலை 21-ம் தேதி நடைபெற உள்ளது.
வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை இப்பயிற்சி நடைபெறும். விருப்பமுள்ளவர்கள் பயிற்சிக் கட்டணம் ரூ.100 செலுத்தி, ஒரு நாள் பயிற்சியில் கலந்துகொள்ளலாம். நிலத்திற்கு மண்புழு உரம் இடுவதால் மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. மண்புழு உரமிட்டால், ரசாயன உரங்களை 50 சதம் குறைத்துக் கொள்ளலாம். இதனால், பணச் செலவு குறைவதுடன் விளைபொருள்கள் அதிக நாள்கள் கெடாமல் நல்ல சுவையுடனும் இருக்கும்.
மண்புழு உரத் தயாரிப்பு குறித்த தர விவரங்களை அறிய தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: முனைவர் ர.முகம்மது ஹாரூன், பேராசிரியர் மற்றும் தலைவர், மண் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலையியல் துறை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை- 625 104 (தொலைபேசி எண்: 0452- 2422956).

**மக்காச்சோளப் பயிர் சாகுபடி பரப்பை அதிகரிக்க நடவடிக்கை**

First Published : 19 Jul 2010 02:11:38 PM IST

தூத்துக்குடி, ஜூலை 18: தூத்துக்குடி மாவட்டத்தில் மக்காச்சோளப் பயிர் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தில் நபார்டு வங்கி மூலம் கூட்டுப் பொறுப்புக் குழுத் தொடக்கப்பட்டுள்ளது.

பசுவந்தனையில் நடைபெற்ற தொடக்க விழாவுக்கு, தலைமை வகித்து, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 3,500 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட மக்காச்சோளப் பயிர், கடந்த ஆண்டில் 18,700 ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இப்பயிரினை எல்லா பருவத்திலும் சாகுபடி செய்யலாம். பூச்சி நோய் தாக்குதல் இல்லாதது.

குறைந்த செலவில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல வருவாயைத் தரக்கூடியது. இப்பயிரினை விவசாயிகள் அதிக பரப்பளவில் பயிரிட முன்வர வேண்டும். வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு பயிறுவகை, எண்ணெய் வித்து, பருத்தி பயிர்களுக்கு உயிர் உரம், நுண் உரம், விதைகள், பயிர்பாதுகாப்புக் கருவிகள் மானியத்தில் வழங்கப்படவுள்ளது என்றார் அவர்.

நபார்டு வங்கி உதவி மேலாளர் நடராஜன் பேசியதாவது: மக்காச்சோளப் பயிரில் சாகுபடி பரப்பினை உயர்த்தி உற்பத்தி திறனை அதிகரித்திட முதல் கட்டமாக இப்பயிரில் கூட்டுப் பொறுப்புக் குழு தொடங்கப்படுகிறது.

மக்காச்சோளப் பயிருக்கு மட்டுமல்லாது பயிறுவகை, எண்ணெய் வித்து, பருத்தி போன்ற அனைத்து பயிர்களுக்கும் அடுத்த கட்டமாக கூட்டுப் பொறுப்புக் குழு உருவாக்கப்படவுள்ளது. இக்குழுவின் மூலம் விவசாயிகள் எளிதாக வங்கியினை அணுகி பயிர்கடனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர்.

கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் ஜவாஹர், தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் செந்தமிழ்செல்வி, பாண்டியன் கிராம வங்கி மண்டல மேலாளர் தெய்வநாயகம் ஆகியோர் பேசினர். ஓட்டப்பிடாரம் வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்ராஜ், கூட்டுறவு வங்கி துணைப் பதிவாளர் ஜமாலுதீன், ஓட்டப்பிடாரம் வேளாண்மை அலுவலர் மணிராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக நபார்டு உழவர் மன்றத் தலைவர் சண்முகமல்லுச்சாமி வரவேற்றார். ஊராட்சித் தலைவர் நவநீதகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 20 Jul 2010 12:00:00 AM IST



சென்னை, ஜூலை 19: தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை செவ்வாய்க்கிழமை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

÷தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொதுவாக மேக மூட்டத்துடன் கூடிய இதமான கால நிலை திங்கள்கிழமை நிலவியது.

÷மாநிலத்திலேயே அதிகபட்சமாக கோவை மாவட்டம் சின்னக் கல்லாறில் 70 மில்லி மீட்டர் மழை பெய்தது. இதற்கு அடுத்தபடியாக திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே. பேட்டை, வால்பாறை ஆகிய இடங்களில் 60 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. மற்ற இடங்களில் திங்கள்கிழமை காலை 8.30 மணி வரை பதிவாகியுள்ள மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்): நீலகிரி மாவட்டம் தேவாலா 50, திருத்தணி 40, ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், பள்ளிப்பட்டு, செங்கோட்டை, பெரியார் அணை, நடுவட்டம் 30, அரக்கோணம்,செங்கல்பட்டு, கொரட்டூர், காஞ்சிபுரம், தாம்பரம், தாமரைப்பாக்கம், பூண்டி, பொன்னேரி, பேச்சிப்பாறை, சோளிங்கர், செங்குன்றம் 10.

÷சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல், பூண்டி, செம்பரம்பாக்கம் மற்றும் கொரட்டூர், தாமரைப்பாக்கம் உள்ளிட்ட ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து 3-வது நாளாக மழை பெய்துள்ளதால், இந்த ஏரிகளுக்கு மிதமான அளவு நீர்வரத்து உள்ளது. சென்னையில் பொதுவாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலையில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தினமலர்

**மஞ்சள் சாகுபடி படுஜோர்**

சங்கராபுரம் : சங்கராபுரம் அடுத்த புதுபாலப்பட்டு பகுதியில் மஞ்சள், மக்கா சோளம் அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர்.

கல்வராயன்மலையை ஒட்டியுள்ள புதுபாலப்பட்டு கிராமத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்

வசிக்கின்றனர். இப்பகுதியில் கரும்பு பயிரிட்டு வந்த விவசாயிகள் பெருத்த நஷ்டமடைந்தனர். இதனால் இந்த ஆண்டு கரும்பு பயிர் குறைந்து போனது.தற்போது இப்பகுதி விவசாயிகள் மக்காசோளம், சூரியகாந்தி, மஞ்சள், வெங்காயம் போன்ற பணப் பயிர்களுக்கு மாறிவிட்டனர். தற்போது மக்கா சோளம் மூட்டை ஒன்றுக்கு 900 முதல் 1200 ரூபாய் வரை கமிட்டியில் விலைபோகிறது.
மேலும் இப்பகுதியில் பலர் மஞ்சள் சாகுபடியும் அதிகளவில் செய்துள்ளனர். 10 மாத பயிரான மஞ்சளை அறுவடை செய்து பாலிஷ் போட்டு ஈரோடு மார்க்கெட்டுக்கு எடுத்து செல்கின்றனர். அங்கு 100 கிலோ மூட்டை 4000 ரூபாய் வரை விலை போகிறது. ஒரு ஏக்கருக்கு 20 மூட்டை வரை மகசூல் கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் கூறினர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரிப்பு : பயிர் மூழ்குவதால் விவசாயிகள் சோகம்**

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருவதால், கரையோரம் சாகுபடி செய்த வெண்டை, எள் போன்ற பயிர்கள் நீரில் மூழ்கி வருவதால் விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.மேட்டூர் அணை 151 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது. அணை நீர்மட்டம் கடந்த ஏப்., 28ம் தேதி 72.030 அடியாகவும், நீர் இருப்பு 34.468 டி.எம்.சி.,யாகவும் குறைந்ததால் அணையில் உட்பகுதியில் மூன்றில் இரு மடங்கு நிலம் வறண்டு விட்டது.வறண்ட நிலப்பரப்பில் இரு மாதங்களுக்கு முன் அணை கரையோர விவசாயிகள் எள், சோளம், வேர்க்கடலை, வெண்டை போன்ற பயிர்களை சாகுபடி செய்தனர். காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்து, நீர்வரத்து அதிகரித்ததால் ஏப்.28ம் தேதிக்கு பின் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது.

நேற்று அணையின் நீர்மட்டம் 81.980 அடியாகவும், நீர் இருப்பு 43.958 டி.எம்.சி.,யாகவும் உயர்ந்தது. இரு மாதங்களில் அணையின் நீர்மட்டம் 9 அடி உயர்ந்ததால் வறண்ட நீர்பரப்பு பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்த சோளம், வெண்டை, எள் போன்ற பயிர்கள் படிப்படியாக நீரில் மூழ்கி வருகிறது.முதிர்ந்து அறுவடைக்கு தயாரான சமயத்தில் நீர்மட்டம் அதிகரித்து பயிர்கள் நீரில் மூழ்குவதும், அறுவடை செய்ய முடியாத அளவிற்கு சாகுபடி பரப்பில் சேறும், சகதியும் நிறைந்திருப்பதும் அணை கரையோர விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

**விவசாய தொழிலாளர் சங்க மாநாடு நிறைவு: திரிபுரா முதல்வர் பங்கேற்பு**

திருச்சி: திருச்சியில் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் 7வது அகில இந்திய மாநாடு நிறைவு விழா நேற்று நடந்தது. நிறைவு விழாவை முன்னிட்டு, திருச்சி கரூர் பைபாஸ் சாலை அருகே விவசாய தொழிலாளர்களின் பேரணி நடந்தது.பேரணியை பொதுச் செயலாளர் விஜயராகவன் துவக்கி வைத்தார். மத்திய, மாநில அரசுகள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை

முழுமையாக அமலாக்கவேண்டும். மேற்கு வங்காளம், கேரளா போல நில உச்ச வரம்புச் சட்டத்தை மற்ற மாநிலங்கள் முறையாக அமல்படுத்த வேண்டும் என்று பேரணியில் கோஷங்களை எழுப்பினர்.

தென்னூர் உழவர் சந்தை திடலில் அமைக்கப்பட்டிருந்த ஜோதிபாசு நினைவுத் திடலை பேரணி அடைந்தது. அங்கு நடந்த பொதுக்கூட்டத்துக்கு தமிழக மாநிலத் தலைவர் லாசர் தலைமை வகித்தார்.திரிபுரா மாநில முதல்வர் மாணிக் சர்க்கார் பங்கேற்று சிறப்புரையாற்றினார். அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் விஜயராகவன், அகில இந்திய விவசாயச் சங்க பொதுச் செயலாளர் வரதராசன், ரங்கராஜன்எம்.பி., தமிழ்நாடு விவசாய சங்க மாநிலத்தலைவர் பாலகிருஷ்ணன் உட்பட ஆயிரக்கணக்கான விவசாய தொழிலாளர் பங்கேற்றனர்.

**தென்னையில் ஊடுபயிராக கடுக்காய், கோகோ சாகுபடி**

ஈரோடு: தாளவாடி மலைப்பகுதிகளில் தென்னையில் ஊடுபயிராக கடுக்காய், கோகோ சாகுபடி செய்யப்படுகிறது.தாளவாடி, தலமலை, கெட்டவாடி, பைனாபுரம் பகுதியில் தென்னையில் ஊடு பயிராக ஜாதிக்காய், கடுக்காய், கோகோ பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ஏக்கருக்கு 200 கோகோ மரக்கன்றுகளை நடவு செய்கின்றனர். மூன்று ஆண்டுகளில் செடிகள் காய்கிறது. ஒரு செடிக்கு ஒரு கிலோ வீதம் ஏக்கருக்கு 200 கிலோ விதை கிடைக்கிறது. ஒரு கிலோ கோகோ விதை 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால், ஏக்கருக்கு கூடுதலாக 35 ஆயிரம் ரூபாய் வீதம் உபரி வருவாய் கிடைக்கிறது.ஜாதிக்காய் ஏக்கருக்கு 75 செடிகள் நடவு செய்கின்றனர். ஏழு ஆண்டுகளில் மகசூல் கிடைக்கிறது. ஒரு மரத்துக்கு 500 முதல் ஆயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது. இம்மரங்கள் 40 முதல் 50 ஆண்டுகள் வரை தொடர்ந்து பயனளிக்கும்.தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:தென்னை விவசாயிகளுக்கு உபரியாக வருவாய் கிடைக்கும் வகையில், கோகோ மற்றும் ஜாதிக்காய் சாகுபடியை ஊக்குவித்து வருகிறோம். கோகோவுக்கு வட மாநிலங்களில் அதிக வரவேற்புள்ளது.மருத்துவ குணம் கொண்ட ஜாதிக்காய்க்கு அதிக வரவேற்புள்ளதால், கோகோ மற்றும் ஜாதிக்காய் சாகுபடி தீவிரமாக நடக்கிறது. இதுவரை, 150 ஏக்கரில் கோகோவும், 20 ஏக்கர் வரை ஜாதிக்காயும் ஊடுபயிராக சாகுபடி செய்துள்ளனர்.

**வறட்சி பாதித்த பயிருக்கு இழப்பீடு விவசாயிகள் எதிர்பார்ப்பு**

காளையார்கோவில்: காளையார்கோவில் ஒன்றியத்தில், கண்மாய் பாசனத்தை நம்பி 10 ஆயிரம் எக்டேரில் விவசாயிகள் நெல் நடவு செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு போதிய மழை இன்றி நெல் உற்பத்தி பாதித்தது. காளையார்கோவில், மறவமங்கலம், நாட்டரசன்கோட்டை பகுதியில் நெல் உற்பத்தி வெகுவாக பாதித்தன. எனவே கடந்த ஆண்டிற்கான பாதிப்புகள் குறித்து, அதிகாரிகள் ஆய்வு செய்து, அரசுக்கு அனுப்பினர். இதற்கான இழப்பீடு தொகையை ஒவ்வொரு ஆண்டும் நவம்பரில் வழங்கி வந்தனர். நடப்பாண்டு முன்னரே வறட்சி நிவாரண தொகையை வழங்கவேண்டும், விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இந்திய கம்யூ., ஒன்றிய செயலாளர் அண்ணாத் துரை கூறுகையில்,"" கடந்த ஆண்டு நெல் மகசூல் கிடைக்கும் நேரத் தில், பாசன கண்மாய்களில் நீர் இன்றி நெற்பயிர் கருகின. அதிகாரிகளும் ஆய்வு செய்ததோடு சரி, நிவாரண தொகை கிடைக்கவில்லை. அ.தி.மு.க., ஜெ., பேரவை செயலாளர் ஆரோக்கியசாமி கூறுகையில், "" 2008-09 ம் ஆண்டு அறுவடை பாதித்த விவசாயிகளுக்கு பயிர்பாதுகாப்பு திட்டத்தில் 30 சதவிகிதம் மட்டுமே இழப்பீடு வழங்கினர். இது விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளித்தது. நடப்பாண்டு பருவமழை துவங்கி, நெல் நடவுக்கான பணிகளை துவங்கிவிட்டனர். இதற்கு பயன்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு இழப்பீடு தொகையை வழங்கவோண்டும்,' 'என்றனர். விவசாயத்துறை அலுவலர் ஒருவர் கூறுகையில்,""நவம்பர், டிசம்பரில் தான், இழப்பீடு வழங்கப்படும். அரசு அறிவித்தால் உடனே கிடைக்கும்," என்றார்.

**பயிர் சாகுபடி: கல்லூரி மாணவிகள் நேரடி "விசிட்'**

குளித்தலை: குளித்தலை பகுதியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் பல்வேறு சாகுபடி குறித்து பார்வையிட்டனர். குளித்தலை அடுத்துள்ள பணிக்கம்பட்டி மயிலாடும்பாறையில் சண்முகம் தோட்டத்தில் திசு வளர்ப்பு சவுக்கு, தேக்கு, மூங்கில், தீக்குச்சி மரம் என 40 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டுள்ளதை அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும், ஆராய்ச்சி நிலைய மாணவிகள் பார்வையிட்டனர். மரம் வளர்ப்பு, விற்பனை, சந்தைப்படுத்தல் குறித்தும் கேட்டறிந்தனர்.

இனுங்கூர் விதைச்சான்று மையத்தில் வேளாண் அலுவலகத்தில், விதை நேர்த்தி, பயன்பாடு குறித்தும், சிறுகமணி கரும்பு ஆராய்ச்சிமையத்தில் செம்மை கரும்பு சாகுபடி, நோய் தடுப்பு குறித்தும் கலந்துரையாடினர். பெட்டவாய்த்தலை ஈ.ஐ.டி., பாரி கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் கிராம பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு வகை, சராசரி மழையளவு தகவல் உள்ளிட்ட தகவல்களையும் சேகரித்தனர்.

**தோட்டக்கலைப் பண்ணைக்கு நிலம் அபகரிப்பு? அரசு மீது பகீர் புகார்**

குன்னூர் : "குன்னூர் அருகேயுள்ள காட்டேரி அரசு தோட்டக்கலைப் பண்ணை நிலம், தனியாரிடம் இருந்து அபகரிக்கப்பட்டுள்ளது' என, குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் காட்டேரி அருகே, அரசு தோட்டக்கலைத் துறை கட்டுப்பாட்டில் 47 ஏக்கர் பரப்பில் பண்ணை உள்ளது. பேரி, ஆரஞ்சு உட்பட விலை உயர்ந்த மரங்கள் அதிகளவு உள்ளன; தேயிலை நாற்றுகள் உற்பத்தி செய்யும் நர்சரியும் பல ஏக்கர் பரப்பில் உள்ளது. இங்குள்ள இரு ஏக்கர் நிலத்தில் புதிய பூங்கா அமைக்கும் பணியை பூங்கா நிர்வாகம் மேற்கொண்டது. தற்போது, ஜெசி முத்தையா என்பவருக்கு சொந்தமான இந்நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது என்பதற்குரிய ஆதாரங்களை அவரது குடும்பத்தினர் வெளியிட்டுள்ளனர்.

சென்னை விருகம்பாக்கம் ஏ.வி.எம்., நகரில் வசிக்கும் ஜெசி முத்தையாவின் வளர்ப்பு மகள் கமலா பத்மினி கூறியதாவது: எனது தாய் ஜெசி முத்தையா, 1948ம் ஆண்டு காட்டேரி பகுதியில் உள்ள 47 ஏக்கர் 39 சென்ட் பரப்பளவிலான நிலத்தை, காசிம் சேட் என்பவரிடம் வாங்கி, 1949 அக்டோபர் 31ம் தேதி முறையாக பதிவு செய்துள்ளார்; அங்கு, பங்களா கட்டி வசித்து வந்தார். நிலத்தில், 3,000க்கும் மேற்பட்ட விலையுயர்ந்த மரங்கள் இருந்தன. உடல் நிலை பாதிக்கப்பட்டதால், 1970ம் ஆண்டில், நிலம், பங்களாவை பராமரிக்கும் உரிமையை (பவர் ஆப் அட்டர்னி) அவரது தம்பி எட்வர்டு முத்தையாவிடம், ஜெசி முத்தையா வழங்கினார்.

1976ல், எட்வர்டு முத்தையா கட்டுப்பாட்டில் இருந்த நிலத்தில் இரு ஏக்கரை, நீலகிரி மாவட்ட நிர்வாகம் கட்டாயப்படுத்தி கையகப்படுத்தியது. நிலத்துக்கு நஷ்டஈடாக நான்கு லட்சத்து 40 ஆயிரத்தை வழங்குவதாக அறிவித்தது. ஏற்க மறுத்த எட்வர்டு, நிலத்தை மீட்க, ஊட்டி கோர்ட்டில் வழக்கு தொடுத்தார்; 1977ம் ஆண்டு, எட்வர்டுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இருப்பினும், நிலத்தை ஒப்படைக்காத மாவட்ட நிர்வாகம், இழப்பீடு தொகையையும் இதுவரை வழங்கவில்லை. கடந்த 1994ல் எட்வர்டு இறந்தார்; பின், அங்குள்ள 47 ஏக்கர் நிலத்தை மாவட்ட நிர்வாகம் முற்றிலுமாக ஆக்கிரமித்து, தோட்டக்கலை துறையின் பயன்பாட்டுக்கு வழங்கியது. இடத்தை மீட்டு கொடுக்கக் கோரி, தொடர் மனுக்கள் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் இல்லை. இவ்வாறு, கமலா பத்மினி கூறினார்.

**பத்திரப் பதிவில் குளறுபடி:** நிலம் தொடர்பான 1979ம் ஆண்டு வரையுள்ள அரசு வில்லங்கச் சான்றிதழில், "ஜெசிமுத்தையா நிலம்' என குறிப்பிடப்பட்டுள்ளது. 2010 வில்லங்கச் சான்றிதழில், "தோட்டக்கலைத் துறைக்கு சொந்தமான நிலம்' என குறிப்பிடப்பட்டுள்ளது. நிலத்தை முறையாக பத்திரப்பதிவு செய்து, பெயர் மாற்றினால் மட்டுமே, வில்லங்கச் சான்றிதழில் நிலத்தை வாங்கியவரின் பெயர் இடம் பெறும். பண்ணை நிலம் தொடர்பான மூலப்பத்திரம் கமலா பத்மினி வசம் உள்ள நிலையில், எவ்வித பத்திரப்பதிவும் மேற்கொள்ளப்படவில்லை; இருப்பினும்,

வில்லங்கச் சான்றிதழில் தோட்டக்கலைத் துறையின் பெயர் இடம் பெற்றுள்ளது, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**விதிமீறி வெட்டப்பட்ட மரங்கள்:** நிலத்தில் பலா, கிளிஞ்சி, நாவல், வெண்தேக்கு, சந்தனம் உட்பட விலையுயர்ந்த பல மரங்கள் உள்ளன. கடந்தாண்டு ஏப்ரல் 23ம் தேதி, இங்குள்ள 13 மரங்களை வெட்ட தோட்டக்கலைத் துறை அனுமதி வழங்கி, 45 ஆயிரத்து 200 ரூபாய்க்கு டெண்டர் விட்டது; டெண்டர் எடுத்தவர் அனுமதி மீறி 25க்கும் மேற்பட்ட விலையுயர்ந்த மரங்களை வெட்டியுள்ளார் என கூறப்படுகிறது.

""தங்களுக்கு சொந்தமான நிலத்தில் அனுமதியின்றி மரங்கள் வெட்டப்படுகின்றன,'' என, கமலா பத்மினி தரப்பினர் வெலிங்டன் போலீசில், கடந்தாண்டு மார்ச் 14ம் தேதி புகார் கொடுத்தனர்; புகாருக்கு ரசீது மட்டும் வழங்கிய போலீசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**மதுரை மாவட்டத்தில் மா, வாழை நடவுக்கு ரூ.46 லட்சம் மானியம்**

மதுரை: மதுரை மாவட்டத்தில் மா, வாழையில் அடர்நடவு செய்ய அரசு மானியம் வழங்கும் வகைக்காக 46.20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.தோட்டக்கலை துறை மூலம் குறைந்த பரப்பில் இரட்டிப்பு மகசூல் பெறும் நோக்குடன் அடர்நடவு முறையில் மா, வாழைக்கன்றுகள் நடப்படுகின்றன. இச்சிறப்பு திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக மதுரை மாவட்டத்திற்கு ரூ. 46.20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.அடர்நடவு முறையில் ஒரு எக்டேருக்கு ரூ. 22 ஆயிரத்து 200 மதிப்புள்ள 400 மா ஒட்டுக்கன்றுகள் மற்றும் பிற இடுபொருட்களும் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. சாதாரணமாக மாங்கன்றுகள் 10 மீட்டருக்கு 10 மீட்டர் இடைவெளியில் நடவு செய்யப்படுகிறது. ஒரு எக்டேருக்கு இம்முறையில் நடவு செய்ய 100 கன்றுகள் தேவைப்படுகிறது. எனவே விவசாயிகள் ஒரு எக்டேர் பரப்பில் 5 மீ.,க்கு 5 மீ., என்ற இடைவெளியில் ஒரு எக்டேருக்கு 400 கன்றுகளை நடவு செய்ய இத்திட்டம் வழிவகுக்கிறது.

மேலும் நுண்ணீர் பாசனம் அமைக்க, அதற்கான திட்டத்தில் 65 சதவீத மானியம் அனுமதிக்கப்படுகிறது. இத்துடன் நல்ல முறையில் பயிர்களின் எண்ணிக்கையை பராமரிக்கும் விவசாயிகளுக்கு 2ம், 3ம் ஆண்டுகளில் ரூ.7400 வீதம் மானியமும் வழங்கப்படுகிறது.இதுபோல வாழைப்பயிரில் முதலாண்டு ரூ. 24 ஆயிரம் மானியமும், 2, 3ம் ஆண்டுகளில் (மறுதாம்பு பயிர்களுக்கு மட்டும்) ரூ. 8 ஆயிரம் வீதம் மானியமும் அனுமதிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஒரு எக்டேருக்கு 3 ஆயிரம் வாழைக்கன்றுகள் 1.8. மீ.,க்கு 1.8 மீ., இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். பயன்பெற விரும்புவோர் கண்டிப்பாக சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க வேண்டும்.

இதற்கு 65 சதவீத மானியம் வழங்கப்படும். இதுதொடர்பாக அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களை அணுகலாம் என கலெக்டர் சி.காமராஜ் தெரிவித்துள்ளார்.

**."சுருட்டை' நோய் தாக்கி கடலை செடிகள் பாதிப்பு விவசாயிகள் கவலை**

காரியாபட்டி: காரியாபட்டி பகுதியில் "சுருட்டை' நோய் தாக்கி கடலை செடிகள் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.காரியாபட்டி பகுதியில் எஸ்.மறைக்குளம், பனைக்குடி, எசலி, தேனூர், உவர்குளம் கிராமங்களில் கடந்த மாதம் பெய்த சிறிய மழைக்கு ஆயிரக்கணக்கான ஏக்கரில் நிலக்கடலை பயிரிட்டனர். பூ பூக்கும் பருவத்தில் "சுருட்டை' பூச்சி வேர்களை தாக்கியது. நூற்றுக்கணக்கான ஏக்கரில் கடலை பயிர் கருகி வருகின்றன. மருந்து தெளித்த பின்னும் இலைகள் மூலம் நோயை உண்டாக்கி மீண்டும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் செலவு செய்தது கூட கிடைக்காமல் போய்விடுமோ என விவசாயிகள் கவலை அடைந்தள்ளனர்.விவசாயி கருப்பசாமி கூறியதாவது: மற்ற விவசாயத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என நினைத்து கடலை விவசாயம் செய்தோம்.

ஏக்கருக்கு 8000 ரூபாய் வரை செலவு செய்தோம். வேலை வாய்ப்பு இப்பகுதியில் இல்லாததால் முழு நேரமும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். பூச்சி தாக்குதலால் இந்த விவசாயமும் கை கொடுக்கவில்லை, என்றார். விவசாய அலுவலர் பாலு கூறியதாவது: மழை பெய்யாமல் குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவினால் பூச்சி தாக்குதல் இருக்கும். மருந்து தெளித்து பூச்சிகளை கொல்ல முடியும். ஆனால் தொடர்ந்து அதே சீதோஷ்ண நிலை இருந்தால் ஒன்றிரண்டு பூச்சிகள் தப்பித்து மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும். இருந்தாலும் இந்நோயை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருவதோடு, தொடர்ந்து அந்த பகுதியை கண் காணித்து வருகிறோம், என்றார்.

**வேளாண் உற்பத்தியாளர்கள் கலந்தாய்வு கூட்டம்**

தூத்துக்குடி : தூத்துக்குடியில் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் கொள்முதலீட்டாளர்கள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது.வேளாண் வணிகத்துறை சார்பாக நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் கோரம்பள்ளம் ஆறு உபவடி நிலபகுதி விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஒட்டநத்தம் பயறு உற்பத்தியாளர்குழு தலைவர் சுப்பாராமன் தலைமை வகித்தார். தூத்துக்குடி வேளாண் வணிக வேள ிண்மை அலுவலர் ராஜா வரவேற்றார். வேளாண்

வணிக வேளாண்மை துணை இயக்குனர் முருகானந்தம் சிறப்புரையாற்றினார். தனியார் நிறுவன மேலாளர்கள் ஜேம்ஸ் ஜெயராஜ், பழனி, மகாராஜன், மகளிர் குழு தலைவி சகாயமேரி உட்பட பலர் கலந்து கொண்டனர். பொது பணித்துறை உதவி செயற்பொறியாளர்கள் முருகன், வேளாண் மை அலுவலர்கள் தாமஸ், சங்கர், மணிகண்டன், வே ளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் ஸ்ரீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் சுரேஷ் நன்றி கூறினார்.

**விலைவாசி உயர்வுக்கு எதிராக 12 கோடி பேரிடம் கையெழுத்து : பா.ஜ., திட்டவட்டம்**

திருப்பூர் : ""அத்தியாவசிய பொருட்களின் விலை உயர் வுக்கு எதிராக நாடு முழுவதும் 12 கோடி மக்களிடம் கையெழுத்து பெற்று, 29ம் தேதி ஜனாதிபதி பிரதீபா பாட்டீலிடம் பா.ஜ., அளிக்க உள்ளது,'' என இக்கட்சியின் தேசிய செயலாளர் கிரண் மகேஸ்வரி தெரிவித்தார்.

திருப்பூரில் கிரண் மகேஸ்வரி கூறியதாவது: தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரை படிக்கும் கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் முதல் 1.5 லட்சம் வரை கல்வி உதவித் தொகை வழங்குகிறது. ஆனால், இந்து மதம் சார்ந்த தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 1,500 ரூபாய் முதல் 5,000 ரூபாய் மட்டுமே உதவித் தொகை கிடைக்கிறது.

சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் கல்வி கடனுக்கான வட்டி மூன்று சதவீதமாக உள்ளது. சிறுபான்மையினர் அல்லாத மாணவர்களுக்கு வழங் கப்படும் கல்வி கடன்களுக்கு 12 முதல் 14 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது. ஏழ்மை சார்ந்த மாணவர்களை பார்க்காமல், ஓட்டுபெறும் நோக்கத்தில் இத்திட்டத்தை காங்., அரசு செயல்படுவது துரதிஷ்டமானது. காஷ்மீர் பிரச்னையிலும் அரசின் கொள்கைகளும் செயல்பாடுகளுமே பிரச்னைக்கு தீர்வு எட்டாத நிலையை ஏற்படுத்துகிறது.

இந்து மக்கள் அதிகமுள்ள மாநிலங்களில் கல் வியில் இதுபோன்ற பாரபட்சம் காட்டுவது நல்லதல்ல. கல்வி அனைவருக் கும் சமமாக கொடுக்கப்பட வேண்டும். இது அவசியமும், அவசரமும் கூட. கல்விக்கு முக்கியத்துவம் தராமல், மதத்தின் அடிப்படையில் பார்ப்பது தவறான கண்ணோட்டம்.

கடந்த 20 ஆண்டுகளில் தற்போது மட்டும் 18 சதவீதம் உணவு பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. விலைவாசி உயர்வை பொறுத்தவரை பல்வேறு போராட்டங்களை பா.ஜ., நடத்தி வருகிறது. இதில், அடுத்தகட்டமாக 12 கோடி மக்களிடம் கையெழுத்து பெற்று, வரும் 29ம் தேதி ஜனாதிபதி பிரதீபா பாட்டீலிடம் கொடுக்க உள்ளோம், இவ்வாறு, கிரண் மகேஸ் வரி கூறினார்.

**மஞ்சளுக்கு சொட்டு நீர் பாசன முறை குறைவு**

திருப்பூர் : அதிகளவில் மகசூல் மற்றும் மானியம் கிடைத்தும், போதிய விழிப்புணர்வு இல்லாததால் மஞ்சளுக்கு சொட்டு நீர் பயன் படுத்தும் விவசாயிகள் குறைந் தளவே உள்ளனர்.

திருப்பூர், பொங்கலூர் பகுதிகளில் அதிகளவில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. கடந்தாண்டு மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் நல்ல லாபம் அடைந்தனர்; மஞ்சள் விலை குவிண்டால் 15 ஆயிரம் வரை விற்றது. இந்தாண்டு அனைத்து பகுதிகளிலும் விவசாயிகள், அதிகளவில் பயிர் செய்துள்ளனர். கோவில்வழி, பாண்டியன் நகர் என திருப்பூர் சுற்றுப்பகுதிகளில் 400 விவசாயிகள் வரை மஞ்சள் பயிரிட்டுள்ளனர்.

வைகாசி மாதம், பயிர் செய்வதற்கு நல்ல தருணம்; விளைநிலங்களில் சராசரியாக ஒரு மாத வளர்ச்சியை மஞ்சள் அடைந்துள்ளது. விளைச் சலுக்கு ஓராண்டு காலம் என்பதால், போதிய தண்ணீர் வசதி இருப்போர் மட்டும் பயிரிட முடிகிறது. விவசாயிகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய, சொட்டுநீர் பாசன முறை உதவுகிறது. திருப்பூர் சுற்றுப்பகுதிகளில் மஞ்சள் பயிரிட் டுள்ள விவசாயிகளில் 10 சதவீதத்தினரே, சொட்டுநீர் முறையை பயன் படுத்துகின்றனர். விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததே இதற்கு காரணம்.

இதுகுறித்து தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சந்தான கிருஷ்ணன் கூறியதாவது: ஒரு மீட்டர் இடைவெளியில் சொட்டுநீர் பாசனம் அமைத்து மஞ்சள் பயிரிடலாம். திருப்பூர் சுற்றுப்பகுதியில் உள்ள 400 மஞ்சள் விவசாயிகளில் 10 சதவீதத் துக்கும் குறைவானோர் சொட்டுநீர் முறையை பயன் படுத்துகின்றனர். ஒரு ஹெக் டேருக்கு 52 ஆயிரம் வரை செலவாகிறது; இதில் 65 சதவீத மானியத்தை அரசு அளிக்கிறது.

ஒரு ஏக்கரில் வாய்க்கால் அமைத்து நீர் பாய்ச்சல் முறையில் 80 சதவீத பரப்பில் மட்டும் பயிர் செய்ய முடியும். சொட்டுநீர் பாசன முறையில் 100 சதவீத பரப்பளவில் பயிர் செய்யலாம்; ஒருமுறை 25 குவிண்டால் எடுக்கும் விளைநிலத்தில் 30 குவிண்டால் என மகசூலை 20 சதவீதம் அதிகப்படுத்தலாம். சராசரியாக குவிண்டால் 10 ஆயிரம் என விற்றாலும், ஆண்டுக்கு 50 ஆயிரம் வரை அதிக லாபம் பெறும் வாய்ப்பை சொட்டுநீர் பாசனம் ஏற்படுத்தி கொடுக்கிறது.

சொட்டுநீர் முறையில் பயிரிட்டுள்ள விளைநிலங் களை, இதர மஞ்சள் விவசாயிகள் பார்வையிட வேண்டும். மஞ்சள் பயிர் செய்தல்முதல் அறுவடை வரை கவனிக்க வேண்டியது அவசியம். வரும் ஆண்டுகளில் மஞ்சள் பயிரிடும் போது, சொட்டுநீர் முறையை பயன்படுத்த முன்வர வேண்டும், என்றார்.

**மஞ்சளுக்கு சொட்டு நீர் பாசன முறை குறைவு**

திருப்பூர் : அதிகளவில் மகசூல் மற்றும் மானியம் கிடைத்தும், போதிய விழிப்புணர்வு இல்லாததால் மஞ்சளுக்கு சொட்டு நீர் பயன் படுத்தும் விவசாயிகள் குறைந் தளவே உள்ளனர்.

திருப்பூர், பொங்கலூர் பகுதிகளில் அதிகளவில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. கடந்தாண்டு மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் நல்ல லாபம் அடைந்தனர்; மஞ்சள் விலை குவிண்டால் 15 ஆயிரம் வரை விற்றது. இந்தாண்டு அனைத்து பகுதிகளிலும் விவசாயிகள், அதிகளவில் பயிர் செய்துள்ளனர். கோவில்வழி, பாண்டியன் நகர் என திருப்பூர் சுற்றுப்பகுதிகளில் 400 விவசாயிகள் வரை மஞ்சள் பயிரிட்டுள்ளனர்.

வைகாசி மாதம், பயிர் செய்வதற்கு நல்ல தருணம்; விளைநிலங்களில் சராசரியாக ஒரு மாத வளர்ச்சியை மஞ்சள் அடைந்துள்ளது. விளைச் சலுக்கு ஓராண்டு காலம் என்பதால், போதிய தண்ணீர் வசதி இருப்போர் மட்டும் பயிரிட முடிகிறது. விவசாயிகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய, சொட்டுநீர் பாசன முறை உதவுகிறது. திருப்பூர் சுற்றுப்பகுதிகளில் மஞ்சள் பயிரிட் டுள்ள விவசாயிகளில் 10 சதவீதத்தினரே, சொட்டுநீர் முறையை பயன் படுத்துகின்றனர். விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததே இதற்கு காரணம்.

இதுகுறித்து தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சந்தான கிருஷ்ணன் கூறியதாவது: ஒரு மீட்டர் இடைவெளியில் சொட்டுநீர் பாசனம் அமைத்து மஞ்சள் பயிரிடலாம். திருப்பூர் சுற்றுப்பகுதியில் உள்ள 400 மஞ்சள் விவசாயிகளில் 10 சதவீதத் துக்கும் குறைவானோர் சொட்டுநீர் முறையை பயன் படுத்துகின்றனர். ஒரு ஹெக் டேருக்கு 52 ஆயிரம் வரை செலவாகிறது; இதில் 65 சதவீத மானியத்தை அரசு அளிக்கிறது.

ஒரு ஏக்கரில் வாய்க்கால் அமைத்து நீர் பாய்ச்சல் முறையில் 80 சதவீத பரப்பில் மட்டும் பயிர் செய்ய முடியும். சொட்டுநீர் பாசன முறையில் 100 சதவீத பரப்பளவில் பயிர் செய்யலாம்; ஒருமுறை 25 குவிண்டால் எடுக்கும் விளைநிலத்தில் 30 குவிண்டால் என மகசூலை 20 சதவீதம் அதிகப்படுத்தலாம். சராசரியாக குவிண்டால் 10 ஆயிரம் என விற்றாலும், ஆண்டுக்கு 50 ஆயிரம் வரை அதிக லாபம் பெறும் வாய்ப்பை சொட்டுநீர் பாசனம் ஏற்படுத்தி கொடுக்கிறது.

சொட்டுநீர் முறையில் பயிரிட்டுள்ள விளைநிலங் களை, இதர மஞ்சள் விவசாயிகள் பார்வையிட வேண்டும். மஞ்சள் பயிர் செய்தல்முதல் அறுவடை வரை கவனிக்க வேண்டியது அவசியம். வரும் ஆண்டுகளில் மஞ்சள் பயிரிடும் போது, சொட்டுநீர் முறையை பயன்படுத்த முன்வர வேண்டும், என்றார்.

**நிலம் ஆர்ஜிதம் செய்வதை ரத்து செய்ய கோரி கோவையில், விவசாயிகள் குடும்பத்துடன் ஆர்ப்பாட்டம்**

கோவை,ஜூலை.20–

நிலம் ஆர்ஜிதம் செய்வதை ரத்து செய்யக் கோரி கோவையில் விவசாயிகள் குடும்பத்துடன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கண்டன ஆர்ப்பாட்டம்

கோவை–மேட்டுப்பாளையம் சாலையும், என்.எச். 47–ம் 100 அடி அகலம் உள்ளதால் அந்த சாலைகளையே 4 வழி சாலையாக மாற்றவும், சம்பந்தப்பட்ட நீலாம்பூர் பைபாஸ், சாவடி பைபாஸ், பெருமாநல்லூர் பைபாஸ், அவினாசி பைபாஸ் திட்டங்களை கைவிடக் கோரியும், இது சம்பந்தமான நில ஆர்ஜித நடவடிக்கைகளை உடனே நிறுதத்தவும், நில ஆர்ஜிதத்திற்கு 2 மடங்கு விலை கோரியும் கோவை, திருப்பூர் மாவட்ட தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் டாக்டர் எம்.ஆர்.சிவசாமி தலைமை தாங்கி பேசினார். எம்.நடராஜ், கோபால்சாமி, காளியண்ணன், சின்னசாமி, அய்யாசாமி,பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்து பேசினார்கள்.

குடும்பத்தினருடன் பங்கேற்பு

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினார்கள். மேலும் அவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் அட்டைகளை வைத்திருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொள்வதற்காக நில ஆர்ஜிதத்தினால் பாதிக்கப்பட்ட சங்கங்கள் மற்றும் கோவை, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.

---

**ஜனவரி – மே மாத காலத்தில் தேயிலை ஏற்றுமதி 19 சதவீதம் உயர்வு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு ஆண்டு ஜனவரி முதல் மே வரையிலான ஐந்து மாதங்களில் நாட்டின் தேயிலை ஏற்றுமதி 19 சதவீதம் உயர்ந்து 7.12 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 5.96 கோடி கிலோவாக இருந்தது.

சி.டி.சி – ஆர்தோடக்ஸ்

நம் நாட்டில் சி.டி.சி. மற்றும் ஆர்தோடக்ஸ் ஆகிய இரண்டு முக்கிய தேயிலை ரகங்களே பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. சி.டி.சி. ரக தேயிலையை, நம் நாடு அதிக அளவில் எகிப்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. உயர்தர ஆர்தோடக்ஸ் தேயிலை ஈராக், ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தேயிலை ஏற்றுமதியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளபோதிலும், நம் நாடு இதர நாடுகளின் போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

இந்தியாவில் தேயிலை பயன்பாடு மிகவும் அதிகமாக உள்ளது. எனவே கென்யா நாட்டிற்கு இணையான அளவில் ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. உலகில் தேயிலை உற்பத்தியில் முன்னணி நாடுகளுள் ஒன்றான கென்யா அதன் மொத்த தேயிலை உற்பத்தியில் 95 சதவீதத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்தியா, சி.டி.சி. ரக தேயிலை ஏற்றுமதியில், கென்யா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆர்தோடக்ஸ் ரக தேயிலை ஏற்றுமதியில் இலங்கை, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் நமக்கு போட்டியை ஏற்படுத்தியுள்ளன.

வட மாநிலங்கள்

நடப்பாண்டின் முதல் ஐந்து மாதங்களில், வட மாநிலங்கள் வாயிலான தேயிலை ஏற்றுமதி 3.18 கோடி கிலோவிலிருந்து 3.11 கோடி கிலோவாக குறைந்துள்ளது. எனினும் தென் மாநிலங்கள் வாயிலான ஏற்றுமதி அதிகரித்ததால் ஒட்டுமொத்த அளவில் நாட்டின் தேயிலை ஏற்றுமதி நல்ல அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. நம் நாட்டில் தற்போது ஒரு தனிநபரின் தேயிலை பயன்பாடு ஆண்டுக்கு 800 கிராம் ஆக உள்ளது. இது, பாகிஸ்தானில் ஒரு கிலோவாக உள்ளது. இந்நிலையில் உள்நாட்டில் தேயிலை பயன்பாட்டை மேலும் அதிகரிக்கும் வகையில் தேயிலை வாரியம் பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**சர்க்கரை ஆலைகளின் வேண்டுகோளுக்கிணங்க கரும்பு சாகுபடி பரப்பளவு குறித்து மறுமதிப்பீடு செய்ய அரசு திட்டம்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
கரும்பு பயிரிடும் பரப்பளவு குறித்த துல்லியமான விவரங்களை வெளியிட வேண்டும் என்று சர்க்கரை ஆலைகள், மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன. இதனையடுத்து, இதனை மறு மதிப்பீடு செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனால், வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்திற்கான சர்க்கரை உற்பத்தி குறித்து துல்லியமான விவரங்களை வெளியிட முடியும்.
நடப்பு பருவத்தில்...
நடப்பு 2009–10–ஆம் ஆண்டு கரும்பு அரவை பருவத்தில் சாகுபடி பரப்பளவு 41.80 லட்சம் ஹெக்டேராக இருக்கும் என அரசு தெரிவித்திருந்தது. இதன் அடிப்படையில் கரும்பு உற்பத்தி 2.53 கோடி டன்னாக இருக்கும் என்ற புள்ளிவிவரம் ஏற்கனவே வெளியிடப்பட்டது. ஆனால், நடப்பு பருவத்தில் கரும்பு சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தி இதைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

*வரும் செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைய உள்ள தற்போதைய பருவத்தில் கரும்பு உற்பத்தி 3.13 கோடி டன்னாக இருக்கும் என அவர்கள் கூறியுள்ளனர். அதே சமயம் இந்த அளவிற்கு கரும்பு விளைய வேண்டுமானால், 45.30 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.*

*முந்தைய பருவத்திற்கான மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது, நடப்பு பருவத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு 15 சதவீதம் அதிகரிக்கும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சர்க்கரைத் துறையினர் உண்மையில் இது 18 முதல் 20 சதவீதம் அதிகரிக்கும் என தெரிவித்துள்ளனர்.*

*இதன்படி, வரும் 2010–11 சர்க்கரை பருவத்தில், 54 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படும். அப்போது கூடுதலாக 6.30 கோடி டன் கரும்பு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. முந்தைய மதிப்பீட்டில் சாகுபடி பரப்பளவு 47.30 லட்சம் ஹெக்டேராக இருக்கும் என்று கூறப்பட்டது.*

*2.50 கோடி டன்*

*நடப்பு பருவத்தில், சர்க்கரை உற்பத்தி 1.87 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, அடுத்த பருவத்தில் 2.50 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு பண்டிகை காலத்தில் 20 லட்சம் டன் சர்க்கரைக்கு பற்றாக்குறை ஏற்படும் என உணவு அமைச்சத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*முதலில் உணவு அமைச்சகம், நடப்பு பருவத்தில் உள்நாட்டில் சர்க்கரை உற்பத்தி 1.45 கோடி டன் அளவிற்கே இருக்கும் என தெரிவித்திருந்தது. இதனால் அதிக விலை கொடுத்து சர்க்கரை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவானது. ஜனவரி, பிப்ரவரி மாத காலத்தில் சர்க்கரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.50–ஆக உயர்ந்தது. எனினும் மறுமதிப்பீட்டில், சர்க்கரை உற்பத்தி 1.87 கோடி டன்னாக உயரும் என மத்திய அரசு தெரிவித்ததால், படிப்படியாக விலை குறைந்து தற்போது ரூ.32–ஆக குறைந்துள்ளது.*

**குன்னூரில் தோட்டக்கலை துறை நிலத்தை கேட்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் உதவி இயக்குனர் போலீசில் புகார்**

*குன்னூர், ஜூலை.20–*

*குன்னூரில் தோட்டக் கலை துறை நிலத்தை கேட்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உதவி இயக்குனர் சார்பில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.*

*அரசு விதைப்பண்ணை*

*குன்னூர்– மேட்டுப்பாளை யம் ரோட்டில் காட்டேரி அருகே 47 ஏக்கர் நிலப்பரப்பில் தோட்டக்கலை துறைக்கு சொந்தமான அரசு விதைப் பண்ணை உள்ளது. இங்கு சுற்றுலா பயணிகளை கவரு வதற்காகவும், தோட்டக் கலை துறையின் வரு வாயை பெருக்கவும் 2 ஏக்கர்*

நிலப்பரப்பில் பூங்கா அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் 47 ஏக்கர் நிலப்பரப்பை தனது வளர்ப்பு தந்தையான ஜெசி முத்தைய்யாவிடம் இருந்து வருவாய் துறை மூலம் மாவட்ட நிர்வாகம் அபகரித்துக்கொண்டதாக சென்னையை சேர்ந்த கமலா பத்மினி என்ற மூதாட்டியும், அவரது மகள் ஜெசியும் புகார் தெரிவித்து இருந்த னர். நிலத்தின் மூலப்பத்திரம் தங்களிடம் இருப்பதாக கூறி, இந்த நிலத்தை மீட்டு தராவிட்டால், தீக்குளித்து தற்கொலை செய்து கொள் எப்போவதாக தெரிவித்து உள்ளனர்.

தோட்டக்கலை துறை புகார்

இதனை தொடர்ந்து குன்னூர் தோட்டக்கலை துறைஉதவி இயக்குனர் சார் பில் மாவட்டநிர்வாகம், குன் னூர் ஆர்.டி.ஓ., வெலிங்டன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோருக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து தோட்டக் கலை துறை உதவி இயக்குனர் மணி கூறியதாவது:–

கடந்த 35 ஆண்டு காலமாக இந்த நிலம் தோட்டக்கலை துறை அனுபவத்தில் உள்ளது. 1975–ம் ஆண்டு இந்த நிலம் வருவாய் துறையினரால் தோட்டக்கலை துறைக்கு வழங்கப்பட்டது. அரசு சார்பில் நிலத்தின் மதிப்புக்கு தொகை வழங்கப்பட்டு உள் ளது. ஆனால் சம்பந்தப் பட்ட வர்கள் இந்த தொகையை வாங்காததால் தொகை கோர்ட்டில் செலுத்தப்பட்டு விட்டது. தற்போது நிலத்தின் வாரிசுதாரர்கள் என்று கூறிக்கொண்டு சிலர் நிலத்தை திருப்பி தராவிட்டால் தீக் குளிப்போம் என்று கூறி வரு கின்றனர். இவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம், குன்னூர் ஆர்.டி.ஓ., வெலிங்டன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோருக்கு புகார் அனுப்பி உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.